பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.**05.11.2019**

<u>நிகழும் திருவள்ளுவராண்டு நவம்பர் மாதம் 5ம் நாள் (05.11.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி கோவிந்தபுரம் வார்டு:G, பிளாக் :22 நகரபுல எண்:1 வேந்தோணி வாய்க்காலில் ஆக்கிரமிப்பு செய்துள்ள 58 நபர்களுக்கு பட்டா வழங்க கோரிய உள்ள தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் கடித ந.க. எண்:1957/2018/டிபி2 நாள்:22.02.2018–ன் படி நகராட்சியின் அறிக்கை சமர்ப்பிக்க அறியுறுத்தப்பட்டுள்ளது. வேந்தோணி வாய்க்கால் பரமக்குடி நகராட்சி பகுதியில் ஏற்படும் கழிவுநீர் மற்றும் மழைநீர் அப்புறப்படுத்தும் வாய்காலாக இயற்கையிலேயே இருந்து வருகிறது. அதன் அடிப்படையில் மேற்படி இடத்தில் 3.00மீ அகலத்தில் கழிவுநீர் வாய்க்கால் நகராட்சியால் கட்டப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி பகுதியில் மழை நீர் மற்றும் கழிவுநீர் அகற்ற வேறு வழிகள் ஏதும் இல்லை. எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் பட்சத்தில் நீரை அப்புறப்படுத்த பயன்படும் முக்கிய கால்வாயாக அமைந்துள்ளது. மேலும் நகராட்சி கழிவுநீர் வாய்க்கால் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பு காரணமாக பராமரிப்பு செய்ய முடியாத நிலை ஏற்படும். ஆகையால் 3.00மீ அகலத்தில் உள்ள கால்வாய் பகுதியினை பராமரிப்பு செய்ய நகராட்சி மேலும் இடம் தேவையாக உள்ளது. இயற்கை சீற்றங்களை கருத்தில் கொண்டு நீர்நிலை வாய்க்கால் போன்றவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பாதுகாக்க பல்வேறு நிலையில் உயர்நீதிமன்றம் வழியுறுத்தியுள்ளது. மேற்படி வாய்கால் பகுதியில் பொதுமக்களின் நலன்கருதி நகராட்சி இடம் தேவையாக உள்ளது என்ற விபரத்தினை அரசுக்கு தெரிவிக்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு–</u><br>நகராட்சி கழிவுநீர் கால்வாய் 3.00மீ அகலத்தில் உள்ளதை பராமரிப்பு பணி செய்ய நகராட்சிக்கு பொதுமக்களின் நலன் கருதி மேலும் இடம் தேவையானதாக உள்ளது என்ற கருத்தை மன்றம் ஏற்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.

**பரமக்குடி நகராட்சி அலுவலகம்,**

நாள்.20.11.2019

<u>நிகழும் திருவள்ளுவராண்டு நவம்பர் மாதம் 20 ம் நாள் (20.11.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள அவசரக் கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள முதல் நிலை நகராட்சியாகும். அரசாணை எண்.85 நாள்22.05.1998ன்படி முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 95547 ஆகும். இராமநாதபுரம் மாவட்டத்தில் வளர்ந்து வரும் நகரங்களில் பரமக்குடி நகராட்சியும் ஒன்றாகும். 36 வார்டுகளை உள்ளடக்கிய இந்நகராட்சியின் பரப்பளவு 13,45 ச.கி. ஆகும்.<br>தற்போது இந்நகரில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை. இந்நகரம் வைகை ஆற்றின் இரு கரைகளிலும் அமைந்துள்ளது. இந்நகரின் குறுக்கே மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வைகை ஆறு செல்கிறது. வைகை ஆற்றின் கரையில், அமைந்துள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் அனைத்தும், வைகை ஆற்றில் நேரடியாக கலக்கிறது. இதனால் வைகை ஆறு மிக மோசமாக மாசுபடுகிறது. மேலும், வைகை ஆற்றின் கரையில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து அதன் மூலம் பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வைகை ஆற்றில் கலக்கும் கழிவுநீரால் நிலத்தடி நீரும் மாசுபடுகிறது. இதனால் பொதுமக்களுக்கு தொற்று நோய் ஏற்படும் அபாயம் உள்ளது.<br>நகரின் பொதுசுகாதாரத்தினை பாதுகாக்கும் பொருட்டு, வைகை ஆற்றின் தெற்கு பக்க கரையில் சுமார் 13 இடங்களில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, கழிவுநீர் வாய்க்கால் மூலம் சேகரம் செய்து கழிவுநீரேற்று நிலையம் அமைத்து நகராட்சிக்குச் சொந்தமான புல்பண்ணைக்கு கொண்டு சென்று புல் வளர்க்கும் பணி மேற்கொள்ளலாம். இதன் மூலம் நகராட்சிக்கு கூடுதல் வருவாய் ஈட்ட வாய்ப்புண்டு. எனவே, இந்நகரின் பொதுமக்களின் சுகாதார நிலை மேம்பாடு அடையவும், நகராட்சிக்கு வருவாய் ஈட்டவும், முதற்கட்டமாக வைகை ஆற்றின் தெற்குப் பக்க கரையில் 3600 மீட்டர் நீளத்திற்கு உரிய நீரேற்று நிலையங்களுடன் கழிவுநீர் வாய்க்கால் அமைக்க வேண்டியது அவசியமானதாகும்.<br>மேலும், பரமக்குடி நகரில் மிக முக்கிய விரிவாக்கப் பகுதியான புதுநகர் பகுதியில், புதிததாக மழைநீர் வடிகால் அமைக்கவும் நகரின் முக்கிய வீதிகளில் ஏற்கனவே உள்ள, பழைய பழுதடைந்த மழைநீர் வடிகால்களை அப்புறப்படுத்திவிட்டு, புதிய மழைநீர் வடிகால்கள் அமைத்து, பிரதான வாய்க்கால்களுடன் இணைப்பு பணிகள் செய்யவும் வேண்டியுள்ளது. எனவே கீழ்க்கண்டவாறு மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் யாவும் மேற்கொள்வதற்கு உரிய பிரேரணைகள் தயார் செய்து சமர்ப்பிக்கப்படுகிறது.<br>1.வைகை ஆற்றின் தென்கரையில் காட்டுப்பரமக்குடி தலைமை நீரேற்ற நிலையம் பின்பகுதி முதல் அணுகுசாலை முடிவு வரை மழைநீர் வடிகால் கட்டும் பணி. மதீப்பீடு ரூ.3000.00 இலட்சம்<br>2.புதுநகர் மற்றும் நகராட்சிக்குட்பட்ட உள்தெருக்களில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. மதிப்பீடு ரூ.700.00 இலட்சம்<br><br>இப்பணிகளுக்குரிய உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3700 இலட்சத்தினை முழு மானியமாக அரசிடம் கோரி பெறுவதற்கு உரிய பிரரேணைகள் தயார் செய்து அனுப்பி வைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u><br>மேற்படி பணிகளுக்குரிய உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3700 இலட்சத்தினை முழு மானியமாக அரசிடம் கோரி பெறுவதற்கு உரிய பிரரேணைகள் தயார் செய்து அனுப்பி வைக்க மன்றம் அனுமதிக்கலாம். |

பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.28.11.2019

**நிகழும் திருவள்ளுவராண்டு நவம்பர் மாதம் 29 ம் நாள் (29.11.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் நவம்பர் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் நவம்பர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் நவம்பர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய்களின் எண்ணிக்கை உதவி இயக்குநர், கால்நடை பராமரித்துறை, பரமக்குடி அவர்களின் கடிதம் நாள்.03.07.2019 ன்படி 36 வார்டுகளிலும் 282 தெருநாய்கள் உள்ளதென கணக்கெடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தெரு நாய்கள் மிகவும் தொல்லைகள் தருவதாக பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும்.<br>தெருநாய்களை கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய அனுபவமுள்ள நிறுவனமான விவேகா அறக்கட்டளை, தேவகோட்டை என்ற தனியார் நிறுவனம் பல்வேறு நகராட்சிகளில் தெரு நாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வருகிறது.<br>எனவே, பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, இந்நகர் பகுதிகளில் சுற்றித் திரியும் 282 தெரு நாய்களையும் பிடித்து கருத்தடை அறுவசை சிகிச்சை செய்யும் பணி மேற்கொள்ளவும், அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள்.05.04.2013ன்படி கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள ஒரு நாய்க்கு ரூ.700/ வீதம் 282 நாய்களுக்கு (282x700 = 197400) ரூ.197400/–யை செலவினம் மேற்கொள்ளவும், மேற்கண்ட கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் பணியினை அனுபவமுள்ள நிறுவனமான விவேகா அறக்கட்டளை, தேவகோட்டை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்<br>( ந.க.எண்.3402/2013/எச்2) |

பொருள்.6

நகர்மன்ற தீர்மான எண். நாள்30.08.2019 ன் படி இந்நகராட்சி பொதுசுகாதார பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு தோல் காலணிகள் மற்றும் தோல் ஷூக்கள் கொள்முதல் செய்வதற்கு சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 29.10.2019 அன்று கீழ்க்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | விநியோகம் செய்ய வேண்டிய பொருள்கள் | ஆஷா ஏஜென்ஸிஸ் பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி | ஜம்ஜம் புட்கேர் சென்டர் பரமக்குடி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | தோல் காலணிகள் – 154 எண்ணம் | ரூ. 26950 | ரூ.29260 |
| 2 | தோல் ஷீக்கள் –9 எண்ணம் | ரூ.7650 | ரூ.8100 |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் குறைந்த தொகைக்கு தோல் காலணிகள் மற்றும் தோல் ஷீக்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய ஆஷா ஏஜென்ஸிஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு–

1.மன்றம் அனுமதிக்கலாம்

2. குறைந்த தொகைக்கு தோல் காலணிகள் மற்றும் தோல் ஷீக்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய ஆஷா ஏஜென்ஸிஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

3.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள்.7

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு தொகுதிகளிலும் தினசரி சுற்றுப்புற சுகாதார பணிகளுக்காகவும் டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு தேவையான பிளீச்சிங் பவுடர் அலுவலக இருப்பில் குறைவாக உள்ளதாகவும் அதன் பொருட்டு 6000 கிலோ பிளீச்சிங் பவுடர் வாங்கி வழக்குமாறு சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர் தெரிவித்தன் அடிப்படையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் நகர் மன்றத்தின் பின்ஏற்பினை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் 04.11.2019 –ந் தேதிய முன் அனுமதி படியும் ரூ.4இலட்சம் உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து 29.11.2019 அன்று ஒப்பந்த புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட 2 நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | விநியோகம் செய்ய வேண்டிய கிருமி நாசினிகள் | பாரத் மார்க்கெட்டிங் என்டர் பிரைசஸ்,தஞ்சாவூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி | ஜெய் ஏஜென்ஸிஸ், திருச்சி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் 25 கிலோ மூடை – 240 எண்ணம் | ரூ. 399360 | ரூ.413520 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பிளீச்சிங் பவுடர் விநியோகம் செய்ய ஒப்பந்தபுள்ளி வழங்கிய பாரத் மார்க்கெட்டிங் என்டர் பிரைசஸ், தஞ்சாவூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு–

1.மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| | 2.தனி அலுவலர் அவர்களின் 04.11.2019 –ந் தேதிய முன்அனுமதியின் படி ரூ.4 இலட்சம் உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குறைந்த தொகைக்கு பிளீச்சிங் பவுடர் விநியோகம் செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கிய பாரத் மார்க்கெட்டிங் என்டர் பிரைசஸ், தஞ்சாவூர் என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.8 | பொது தேர்தல் 2019–பரமக்குடி சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட நகராட்சி பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களை செம்மை படுத்துதல் மற்றும் இதர தேர்தல் பணிகள் படிவங்கள் 6,7,8 மற்றும் 8A பெற்று கணினியில் பதிவேற்றம் செய்து செக்லிஸ்ட் மற்றும் Update Process செய்யும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கு கணினி அமைப்பாளர் (Computer Programmar) வைத்து மேற்படி பணிகள் மேற்கொள்ள இருப்பதால் மற்றும் உள்ளாட்சி தேர்தல் பணிகள் எதிர் நோக்கி தேர்தல் பணியின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் 67 வேலை நாட்களுக்கு மட்டும் ஒருவரை நியமித்து கொள்ளவும், மாவட்ட ஆட்சியர் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட சம்பள விலை விகிதத்தின்படி ஊதியம் வழங்கவும் மேற்படி தேர்தல் பணிகளுக்கு இதனால் ஏற்படும் செலவினங்களுக்கு உத்தேச தொகை. ரூ=33460/–ஐ பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.9 | இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு. கே. மோகன்தாஸ் என்பவர் அரசாணை எண்.21 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 23.02.2006–ன் படி நுழைவு மட்ட பணியிடமான பதிவறை எழுத்தர் பணியிடத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அன்னார் தினக்கூலி பணியாளராக பணிபுரிந்த காலத்தில் 50 சதவீத பணிக்காலத்தினை ஓய்வூதிய பயன்களுக்காக சேர்க்கவும் மற்றும் பழைய GPF திட்டத்தில் சேர்க்கவும் தெரிவித்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார் (வழக்கு எண் WP26065/2019). இவ்வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு. V. ஜெயபிரகாஷ் நாராயணன் பரமக்குடி நகராட்சியின் சார்பாக ஆஜராகி உள்ளார்.<br>எனவே இவ்வழக்கிற்கான அனைத்து செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண் 2693/2019/சி1) |
| பொருள்.10 | இந்நகராட்சி பகுதியில் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக பெய்து வரும் தொடர் மழையினால் இந்நகராட்சி கலவை உரக்கிடங்கில் அனைத்துப் பகுதிகளிலும் மழைநீர் சூழ்ந்துள்ளது. எனவே குப்பைகளை சேகரித்து கொட்டுவதற்கு செல்லும் வாகனங்கள் உள்ளே செல்ல முடியாமல் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. மழைநீரில் மிதக்கும் கண்ணாடி பாட்டில்கள் மீது வாகனங்கள் செல்வதால், வாகனங்களின் டயர்கள் பஞ்சராகிவிடுகிறது. மேலும் மேற்படி பகுதி முழுவதும் சேறும் சகதியுமாக இருப்பபதாலும், குப்பைகள் நிறைந்து இருப்பதாலும், வாகனங்கள் உள்ளே சென்று குப்பைகளை கொட்டும்போது சிக்கிக் கொண்டு வெளியேறுவதில் மிகவும் கடினமாக உள்ளது. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி கலவை உரடக்கிடங்கு பகுதியில் குப்பைகளை வாகனங்கள் மூலம் கொட்டுவதற்கு ஏதுவாக குவிந்திருக்கும் குப்பைகளை அப்புறப்படுத்திட கிட்டாச்சி (HITACHI) JCB இயந்திரம் மூலம் பணி மேற்கொள்ள அனுமதிக்கும், மேற்காண் பணியினை ரூ.1,50,000/–க்கு உத்தேச செலவினத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு. |

<table>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்காண்ட செலவினத்தை திடக்கழிவு மேலாண்மை பயனர் (SUC) கட்டணத்திலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.11</td><td>பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எ பிளாக் 1, நகர்புல எண். 8/16பி,22, 10/4பிடி பழைய சர்வே எண்.89/8 மொத்தப்பரப்பளவு 1870.00.சமீ. அமைந்துள்ள இடத்திற்கு அனுமதியற்ற மனையில் அரசாணை எண்.78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04/05/2017 மற்றும் அரசாணை எண். 172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.13.12.2017 ஆகியவற்றின்படி கொள்கை அமைப்பான ஒப்புதல் நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் சிவகங்கை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் செயல்முறை ஆணை எண்8889/2018/சிம2 நாள்.04.07.2019 மனைப்பிரிவு வரைபடத்தின்படி பத்திர எண் 4320/2019 நாள் 17.10.2019ன் படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பூங்காவையும் இனாம் சாசனம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு–<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அனுமதியற்ற மனை பிரிவுகளை வரன்முறைப்படுத்தும் அரசாணைப்படி நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் சிவகங்கை அவர்கள் வழங்கியுள்ள கொள்கையிலான ஒப்புதலினை உள்ளாட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சாலைகள் மற்றும் பூங்காவையும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி தான பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.12</td><td>இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் எமனேஸ்வரம் ஜீவாநகர் பகுதியில் ரூ.72.70 இலட்சத்திற்கு கட்டப்பட்டுள்ள (MCC) நுண்உர செயலாக்க மையத்தின் அருகில் வைகை ஆற்றின் கரையோரம் இருப்பதால் பாதுகாப்பு கருதி மையத்தை சுற்றி காம்பவுண்டு சுவர் கட்டப்பட்டதால் மேற்படி பணி முடிவு பெறாமல் உள்ளது. எனவே மேற்படி மையத்திற்குத் தேவையான இயந்திரங்கள் வாங்கவும், பூச்சு, வயரிங் பணிகள் மற்றும் பெயிண்டிங் பணிகள் மேற்கொண்டு மையத்தை பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.13</td><td>இந்நகராட்சி பகுதியில் உள்ள 36 வார்டுகளில் உள்ள பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு காவேரி கூட்டுக் குடிநீர் திட்ட சேமிப்பு தொட்டியில் இருந்து நீரேற்றம் செய்யும் குடிநீரில் வாயு குளோரினேசன் செய்யும் பொருட்டு காவேரி கூட்டுக் குடிநீர் நீரேற்று நிலையம் முன்பக்க சுற்றுச் சுவரின் வலதுபுறம் வெளிப்பக்கம் கட்டிடம் ரூ.8.00 லட்சம் மதிப்பீட்டில் கட்ட இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 14.11.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு.பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர்</td><td>0.03 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>2.17 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக் குறிப்பு–<br>1) மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்களில் திரு.பி.கோவிந்தன், ஒப்பந்தாரர் அவர்களின் விலைப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 0.03 சதவீதம் குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.<br>2) மேலும் குடிநீர் அவசர அவசியம் கருதி நர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.14</td><td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள காந்திநகர் பள்ளி கட்டித்தின் முன்புறம் உள்ள வளாகத்தில் மழைநீர் தேங்குவதால் பள்ளி மாணவர்களுக்கு ஏற்படும் சுகாதார பாதிப்பை கட்டுப்படுத்த மேற்கண்ட பள்ளி வளாகத்தில் தளத்தினை உயர்த்தி பேவர் கல் தளம் அமைக்கும் பணியை ரூ.7.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். நாள். .10.19ல் அனுமதி அளித்ததின் பேரில் 14.11.2019 அன்று ஒப்பந்தப்புள்கள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு.பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர்</td><td>0.06 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>0.67 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலகக் குறிப்பு—<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.15</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26, பாரதிநகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பகிர்மானக் குழாய்களில் அடைப்புகள் ஏற்பட்டும், உடைந்து விட்டபடியால் மேற்க்ண்ட பகுதிக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டதை தொடர்ந்து அப்பகுதியில் புதிதாக குடிநீர் விநியோக குழாய்கள் ரூ.1.20 லட்சம் மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்றத் தீர்மான எண். நாள். .08.2019ன்படி அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து 14.10.2019ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்
<table>
<tr><td>1</td><td>திரு.பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர்</td><td>0.11 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>1.80 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலகக் குறிப்பு—<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள விலைப்புள்ளி விலைவிகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 0.11 குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.16</td><td>பரமக்குடி நகராட்சியில் (SHPC) மாநில உயர்மட்ட ஆற்றல் குழு 7 மற்றும் 8ன்படி பெறப்பட்ட பேட்டரி மூலம் இயங்கக்கூடிய 51 வாகனங்களுக்கு பேட்டரி ஜார்ஜ் செய்யும் வசதியுடன் அமைக்கும் பொருட்டு எமனேஸ்வரம் பகுதியில் பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனங்களுக்கு எமனேஸ்வரம் பள்ளி வாசல் தெருவில் உள்ள மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் மேற்படி பேட்டரி ஜார்ஜ் செய்யும் வசதியுடன் அமைப்பதற்கு மேற்படி மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் புதிதாக காம்பவுண்டு சுவர் கட்டுதவற்கும் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4,40,000/—க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டடப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.17</td><td>இந்நகராட்சி பகுதியில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக நகரின் தாழ்வான பகுதிகளில்</td></tr>
</table>

தேங்கும் மழைநீரை வெளியேற்றும் பொருட்டு இரண்டு எண்ணம் ஆயில் இஞ்சின்கள் ரூ.80,000/– மதிப்பீட்டில் வாங்க இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். நாள். .10.2019ன்படி அனுமதி அளித்ததின் பேரில் 20.1.2019ந் தேதி உள்ளூர் நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விரப்படி இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ மதி வெங்கடேஸ்வரா ஸ்டோர்<br>7/327, நேதாஜி ரோடு,<br>பரமக்குடி | ரூ.80,800/– |
| 2 | ஸ்ரீ மீனாட்சி மெஷினரி ஸ்டோர்<br>6/308, எப்–2, மதுரை–மண்டபம் ரோடு<br>பரமக்குடி | ரூ.79100/– |

அலுவலகக் குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மீனாட்சி மெஷினரி ஸ்டோர், பரமக்குடி என்ற நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொண்டு மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.18**

இந்நகராட்சியில் நடைபெற உள்ள நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2019–2020க்கு ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்த வகையிலும், பசும்பொன்.உ.முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் குருபூஜை விழாவிற்காக வருகை புரிந்த மாண்புமிகு. முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் வருகையை முன்னிட்டும் வரவேற்பு மலர் வெளியிட்ட வகையிலும் கீழ்கண்ட நாளிதழ்களுக்கு கீழ்கண்ட விபரப்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | ACCORD ADVERTISING AGENCY, CHENNAI (TENDER NOTICE TURIP 2019-2020 | ரூ.69563 |
| 2 | தம்பட்டம் தினசரி நாளிதழ் | ரூ.15000 |
| 3 | நமது முரசு | ரூ.15015 |
| | மொத்தம் | 99578 |

அலுவலகக் குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம், மேலும் இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.19**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மற்றும் பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் குருபூஜை அரசு விழாவிற்காக வருகை தந்த மாண்புமிகு.முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களை வரவேற்கும் பொருட்டு நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்ட நாளிதழ்களுக்கு கீழ்கண்ட விரப்படி தொகைகள் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | மாலை தமிழகம் | ரூ.14700 | குருபூஜை விழா வரவேற்பு மலர் |
| 2) | தினத்தந்தி | ரூ.34650 | ,, ,, |
| 3) | தினமலர் | ரூ.35344 | ,, ,, |
| 4) | தினசூரியன் | ரூ.18000 | ,, ,, |
| 5) | தினபூமி | ரூ.21000 | தொழில் மலர் விளம்பரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 6) | மாலைமலர் | ரூ.33784 | ,, ,, |
| | 7) | மாலை மலர் | ரூ.33784 | குருபூஜை விழா வரவேற்பு மலர் |
| | 8) | தினமணி | ரூ.31560 | ,, ,, |
| | 9) | AD VISTAA | ரூ.41213 | ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு |

| | |
|---|---|
| | அலுவலகக் குறிப்பு– <br> மேற்கண்ட விவரப்படி நாளிதழ்களுக்கு தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.20 | பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் ஏற்படும் மின் பழுதுகளை சரி செய்ய மின் கம்பி உதவியாளர் 4 நபர்களை மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் கமிட்டி விலை விகிதத்தின்படி தனியார் மூலம் தற்காலிக பணியாளர்களைக் கொண்டு தெருவிளக்கு பணிகளை மேற்கொள்ள ஜனவரி 2020 முதல் 6 மாத காலத்திற்கு ஊதியம் வழங்க ரூ.3,00,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> அலுவலகக் குறிப்பு– <br> மன்றம் அனுமதிக்கலாம், மேற்படி இப்பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமக்கலாம். |
| பொருள்.21 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருக்களில் 1827 எண்ணம் 40 வாட்ஸ் குழல் விளக்குகளும், 220 எண்ணம் சோடியம் ஆவி விளக்குகளும், 65 வாட்ஸ் சி.எஸ்.எஸ். விளக்குகள் 279 எண்ணம், 3 எண்ணம் உயர் கோவுர மின் விளக்குகள், 4X24 வாட்ஸ் விளக்குகள் 124 எண்ணம், 135 எண்ணம் 2X24 மின் சிக்கன விளக்குகளும் ஆக மொத்தம் 2770 எண்ணம் தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேற்படி தெருவிளக்குகளுக்குத் தேவையான உதிரிப் பொருட்கள் அலுவலக இருப்பில் குறைவாக இருக்கும் காரணத்தினால் 2019–2020ம் ஆண்டிற்கு புதிதாக உரிதிப் பொருட்கள் வாங்குவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,90,000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> அலுவலகக் குறிப்பு– <br> மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.22 | இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருக்களுக்கு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் விநியோகக் குழாய்கள் மற்றும் பகிர்மானக் குழாய்கள் வாயிலாக குடிநீர் சப்ளை செய்யும் போது ஏற்படும் அதிக அழுத்தம், கனரக போக்குவரத்து, மின்கம்பங்கள் ஊண்டுதல், கண்ணாடி கேபிள்கள் பதித்தல் ஆகிய காரணங்களால் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் வேர்களினால் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய நகராட்சியில் போதிய பணியாளர்கள் மற்றும் தளவாட பொருட்கள் இல்லாத காரணத்தினால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதில் சிரமங்கள் ஏற்படுகின்றது. எனவே, பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வழங்கும் பொருட்டு டிசம்பர் 2019 முதல் மே 2020 வரை ஆறு மாதத்திற்கு குழாய் உடைப்புக்களை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> அலுவலகக் குறிப்பு– <br> 1) மன்றம் அனுமதிக்கலாம். <br> 2) மேற்படி பணியை நகராட்சி குடிநீர் நிதி மூலம் மேற்கொள்ளலாம். |
| பொருள்.23 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 1827 குழல் விளக்குகளும், 220 சோடியம் ஆவி |

| | |
|---|---|
| | விளக்குகளும், 65 வாட்ஸ் சி.எப்.எஸ். விளக்குகளும் 279 எண்ணமும், உயர் கோபுர மின்விளக்கு 30 எண்ணமும், 4x24 வாட்ஸ் விளக்கு 124 எண்ணமும், 1x24 வாட்ஸ் மின்சிக்கன விளக்குகள், 133 எண்ணமும், 2x24 வாட்ஸ் மின்சிக்கன விளக்கு 155 எண்ணமும் ஆக மொத்தம் 2770 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின் விளக்குகளை அவ்வப்போது பராமரிக்கத் தேவையான உதிரி பொருட்களை 2019—2020ம் ஆண்டிற்கு வாங்க உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது, மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மன்றம் அனுமதிக்கலாம், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி.